**OS.No.422/2021 P.W.1-துளசிராமன் 02.03.2026**

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

நான் முதுநிலை கணிதம் படித்து தனியார் நிறுவனத்தில் மேலாளராக பணியாற்றி வருகிறேன். என் மனைவி இளங்கலை அறிவியல் படித்துள்ளார். நான் இடம் வாங்குவதற்காக ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தப்படி இன்னும் சொத்தை எழுதி தராததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை வாங்குவதற்கு முதலில் எவ்வாறு அனுகினேன் என்றால் சங்கர் என்ற பொறியாளர் மூலம் அனுகினேன். மேற்படி சங்கர் என் நண்பரா என்றால் இல்லை. அவரை ஒரு புரோக்கர் மூலம் தெரியும். நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை இணையதள விளம்பரத்தின் மூலம் அறிந்து கொண்டு தாவா சொத்தை கிரயம் வாங்க முயற்சித்தேன் என்று கூறியிருப்பது தவறா என்றால் எனக்கு புரோக்கரின் பெயர் தெரியவில்லை, அதனால் அவ்வாறு கூறினேன்.

(நேரமின்மையால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)